www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

Thoothukudi - Term 1 2024

# T முதல் பருவத் தொகுத்தறித் தேர்வு - 2024

## ஏழாம் வகுப்பு

நேரம்: 2.00 மணி தமிழ் மதிப்பெண்கள்: 60

அனைத்து வினாக்களுக்கும் விடையளி:-

அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:- **10×1=10**

1) 'நெறி' என்னும் சொல்லின் பொருள் ________

அ) வழி ஆ) குறிக்கோள் இ) கொள்கை ஈ) அறம்

2) வானில் ________ கூட்டம் திரண்டால் மழை பொழியும்

அ) அகில் ஆ) முகில் இ) துகில் ஈ) துயில்

3) ஆசிய யானைகளில் ஆண்-பெண் யானைகளை வேறுபடுத்துவது ________

அ) காது ஆ) தந்தம் இ) கண் ஈ) கால் நகம்

4) பாஞ்சாலங்குறிச்சியில் ________ நாயை விரட்டிடும்

அ) முயல் ஆ) நரி இ) பரி ஈ) புலி

5) முத்துராமலிங்கத்தேவர் நடத்திய இதழின் பெயர் ________

அ) இராஜாஜி ஆ) நேதாஜி இ) காந்திஜி ஈ) நேருஜி

ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக:-

6) யானைக் கூட்டத்திற்கு ஒரு ________ யானைத்தான் தலைமை தாங்கும்.

7) கரடிகளைத் தேனீக்களிடமிருந்து காப்பது அதன் ________

இ) பொருத்துக.

8) பொக்கிஷம் - மிகுதி

9) சாஸ்தி - பெரும்பரப்பு

10) விஸ்தாரம் - செல்வம்

ஈ) எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடையளி. **5×2=10**

11) தமிழ்மொழியின் பண்புகளாக நாமக்கல் கவிஞர் கூறுவன யாவை?

12) 'குற்றியலுகரம்' என்னும் சொல்லைப் பிரித்து விளக்கம் தருக.

13) காட்டுப்பூக்களுக்கு எதனை உவமையாகக் கவிஞர் சுரதா குறிப்பிடுகிறார்?

14) மானின் வகைககள் சிலவற்றின் பெயர்களை எழுதுக.

15) தம் வயிற்றுக்குத் தாய் எதனை உவமையாகக் கூறுகிறார்?

16) வாழும் நெறி யாது?

17) முத்துராமலிங்கத்தேவர் பெற்றிருந்த பல்துறை ஆற்றலைப் பற்றி எழுதுக.

உ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு ஓரிரு தொடர்களில் விடையளி. **3×4=12**

18) பேச்சுமொழிக்கும், எழுத்துமொழிக்கும் இடையே உள்ள வேறுபாடுகளுள் மூன்றினை விளக்குக.

19) 'காடு' பாடலில் விலங்குகளின் செயல்களாகக் கவிஞர் கூறுவனவற்றை எழுதுக.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

Thoothukudi - Term 1 2024



20) தன் மகன் குறித்துத் தாய் கூறிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

21) பாஞ்சாலங்குறிச்சியில் வீடுகள் எவ்வாறு இருக்கும்?

22) தொழிலாளர் நலனுக்காக முத்துராமலிங்கத்தேவர் செய்த தொண்டுகள் யாவை?

ஊ) பின்வரும் மனப்பாடப் பகுதியை அடிபிறழாமல் எழுதுக:- 4+2=6

23) 'சிற்றில் நற்றூண்' எனத் தொடங்கும் புலி தங்கிய குகைப்பாடலை எழுதுக.

24) 'வாய்மை' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

எ) அனைத்து வினாக்களுக்கும் விடையளி:- 10×1=10

25) பிரித்து எழுதுக:- i) குரலாகும் ii) அனைத்துண்ணி

26) சேர்த்து எழுதுக:- i) வான் + ஒலி ii) வேட்டை + ஆடிய

27) தொகைச் சொல்லை விரித்து எழுதுக:- நாற்றிசை

28) கலைச்சொல் தருக: i) Dialogue ii) Unity

29) பிழையைத் திருத்தி எழுதுக:- குழலி நடனம் ஆடியது

30) இருபொருள் கொண்ட ஒரு சொல்லால் நிரப்புக

நீ அறிந்ததைப் பிறருக்குச் ________

எழுத்துகள் தொடர்ந்து நின்று பொருள் தருவது ________

31) தமிழ் எண் கொண்டு நிரப்புக:-

நான் படிக்கும் வகுப்பு ________

32) பொருந்தாத சொல்லை எடுத்து எழுதுக.

பண்பு, மஞ்சு, கண்டு, எஃகு

33) இடைச்சொல் 'கு' சேர்த்துத் தொடரை எழுதுக.

மாடு புல் கொடுத்தார்.

34) எதிர்பாலுக்குரிய பெயர்களை எழுதுக.

i) பெண் × ________ ii) அரசன் × ________

ஏ) ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி:- 1×6=6

35) கவிஞர் தமிழை ஏன் தேனுடன் ஒப்பிடுகிறார்?

36) வ.உ.சிதம்பரனாரின் உரையை வாழ்க்கை வரலாறாகச் சுருக்கி எழுதுக.

ஐ) ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி:- 1×6=6

37) நீங்கள் சென்று வந்த சுற்றுலா குறித்து உங்கள் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

38) 'நான் விரும்பும் தலைவர்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

*********

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com